21st December 1956]

Selection of Gramasevaks

* 396 *Q.*—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) how many applicants were interviewed in July 1956 at Kovilpatti for the selection of Gramasevaks;

(*b*) how many of them have been selected; and

(*c*) whether there is any proposal to send away any of them after they have undergone training for more than two months?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 310.

(*b*) 115.

(*c*) A suitability test was held a month after the commencement of the training and such of those who were found absolutely unsuitable were eliminated.

SRI M. P. SUBRAMANIAM : ஸார், இதைப்போல் 115 பேர்கள் எடுக்கப்பட்டு அவர்களிலிருந்து சிலரை வெளியேற்றியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்கள் எல்லோரும் கடன் வாங்கி 60 அல்லது 70 ரூபாய் செலவு செய்து வாளி, பக்கெட், இன்னும் தட்டு முட்டு சாமான்கள் முதலியவைகள் பயிற்சி பெறும் காலத்தில் வாங்கக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் ரொம்பவும் வறுமையான நிலையில் இவ்வளவு செலவு செய்து வாங்கிய பின்தான் அவர்களுக்கு வேலையில்லை யென்று கூறினதால் அதிகப்படியாக வறுமை யடைந்தார்கள். அவர்களை வேலைக்கு எடுத்துக்கொண்ட பிறகு அவர்களுக்கு டெஸ்ட் வைத்து அவர்களை வேலையை விட்டு நீக்குவது என்பது சரியல்ல. வேலைக்கு எடுக்கு முன்னரே எல்லா டெஸ்டுகளையும் வைக்கவேண்டும். எடுத்தபின் டெஸ்ட் வைப்பது நியாயமல்ல. இதை இனி கடைபிடிப்பார்களா ? வீட்டுக்கு அனுப்பியவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல டெஸ்டுகள் வைத்துத் தான் அவர்களைப் பொறுக்கி எடுக்கிறார்கள். இருந்தாலும் அவர்களை ஒரு மாதத்திற்குப் பிறகுதான் வேலையை விட்டு நீக்கி இருக்கிறார்கள். சிலர் அந்த வேலைக்கு தகுதியற்றவர்கள் என்று கருதியதால்தான் அப்படி வேலையை விட்டு நீக்கி இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு 18 மாதங்களுக்கு ஸ்டைபண்ட் கொடுப்பதில் பயன் இல்லை. ஆகவே, பயிற்சி பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்று கருதியதன்பேரில் தான் அவர்களை நீக்கியிருக்கிறார்கள். அப்படி ஒரு சிலரைத்தான் நீக்கி யிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை குறைவுதான். தேவையைப் பொருத்த மட்டில் எடுக்க வேண்டியதாக இருப்பதால் அப்படிச் செய்ய வேண்டியதாக இருந்தது. அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் 428 பேர்களில் 11 பேர்கள்தான்.

SRI K. ARANGANATHAN : இந்த கிராம சேவகர்கள் எந்த யோக்கியதாம்சத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? 18 மாதங்கள் கொடுக்கப்படும் பயிற்சிக்குப் பிறகு கிராமங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிற பல கிராம சேவகர்கள் அந்த வேலைக்குத் தகுதி இல்லாமல் இருக்கிறார்கள் என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் ?

THR HON. SRI M. BHAKTAVATSALAM : 18 மாதம் பயிற்சி பெற்று வந்திருக்கக்கூடிய கிராம சேவகர்களே அந்த வேலைக்குத் தகுதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று கனம் அங்கத்தினர் சொல்கிறார். அப்படி இருந்தால் அப்பொழுதே நடவடிக்கை எடுத்துக் கொள்வோம். இதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் அவர்களை எடுத்து விடப்போகிறார்கள்.